www.padippakam.com

செப்டம்பர் 2000 ரூ. 3.00

மக்கள் மாண்பைக் காக்கும் மாத இதழ்

# களம்




## புழுதி கிளப்பிய காஞ்சி மாநாடுகள்!



## விவசாயத் தொழிலாளர்களுக்கும் புதிய ஊதியம்

படிப்பகம்

www.padippakam.com

# அரசியல் சட்டத்திற்கு அறுவை சிகிச்சை

**நமது அரசியலமைப்புச் சட்டததை மறு ஆய்வு செய்ய முன்வந்துள்ளது பா.ஜ.க. அரசு. இந்நிலையில் இச்சட்டத்திலுள்ள சில அம்சங்களை தெரிந்து கொள்வது அவசியம். இந்த அம்சங்கள் மாற்றப்பட வேண்டுமா?**

### கலை, கல்விக்கான உரிமைகள்

*29. (1)* இந்திய எல்லைக்குள் வாழ்கின்ற தமக்கெனத் தனி மெழி, வரி வடிவம் அல்லது பண்பாடு உள்ள குடிமக்களுக்கு அவற்றைப் பேணிக் காப்பதற்கான உரிமை இருக்கிறது.

*(2)* சமயம், சாதி, இனம், மொழி அல்லது இன்ன பிற வேறுபாட்டின் காரணமாக எந்தக் குடிமகனுக்கும் அரசால் அல்லது அரசு உதவித் தொகையால் நடத்தப் படும் கல்விச் சாலைகளில் அனுமதி அளிப்பதற்கு மறுப்பு தெரிவிக்ககூடாது.

*30. (1)* மதச் சார்பு அல்லது மொழியின் காரணமாகச் சிறுபான்மையினர் என்று கருதப்பட்டுள்ள வகுப்பினருக்கு; தமக்கெனக் கல்விச் சாலைகளை நிறுவுவதற்கும் அவற்றை நிர்வகிப்பதற்கும் உரிமை இருக்கிறது.

*(2)* மொழி அல்லது மதத்தின் காரணமாகச் சிறு பான்மையினராக உள்ளவர்களின் நிர்வாகத்தின் கீழ் ஒரு கல்விச் சாலை இருக்கிறது என்ற காரணம் காட்டி, அதற்கு உதவித் தொகை அளிப்பதில் எத்தகைய பாகுபாட்டையும் அரசு காட்டக்கூடாது.

### சொத்துரிமை

*31. (1)* சட்டபூர்வமான நடவடிக்கை இல்லாமல் எவருடைய சொத்தையும் பறிக்கக் கூடாது.

*(2)* சட்டப்படியும் பொதுமக்கள் நலனைக் கருதியும் அல்லாமல் எந்த சொத்தையும் வற்புறுத்தி எடுத்துக் கொள்ளக்கூடாது அல்லது வாங்ககூடாது. அப்படி எடத்துக் கொள்ளும்போதும் வாங்கும்போதும் அத்தகைய சட்டபடி அதற்கு நிர்ணையிக்கப்பட்டுள்ள விலையை அல்லது அந்தச்சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி அளிக்க வேண்டும். அப்படி நிர்ணயிக்கப்பட்ட விலை போதுமானதல்ல அல்லது அந்தத் தொகையில் ஒரு பகுதியை அல்லது முழுவதையும் ரொக்கமாக அல்லது வேறு எப்படியேனும் கொடுக்க வேண்டும் என்ற காரணம் அல்லது வேறு எந்தக் காரணத்துக்காகவும் அதுபற்றி எந்த நீதிமன்றத்திலும் கேள்வி கேட்க முடியாது.

எனினும் *30* ஆவது கோட்பாட்டின் *(1)* ஆவது கூறில் குறிப்பிட்டுள்ள சிறுபான்மையோரால் நடத்தப்படும் ஒரு கல்விச் சாலைக்குச் சொந்தமான சொத்தை எடுத்துக் கொள்வதற்கான சட்டத்தை உருவாக்கும் போது, அந்தச் சட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்படும் அல்லது உறுதி செய்யப்படும் தொகை அந்த கூறில் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புக்கு பங்கமின்றி அல்லது தடையின்றி இருக்குமாறு உறுதி செய்து கொள்ள வேண்டும்.

*(2எ)* ஒரு சொத்தைத் தமதாக்கிக் கொள்ளும் உரிமையை அல்லது வசப்படுத்திக் கொள்ளும் உரிமையை அரசு, அரசுக்குச் சொந்தமானதும் அரசால் நிர்வாகிக்கப் படுவதுமான ஒரு வாரியத்திற்கேற்ற விதிமுறைகள் ஒரு சட்டத்தில் இல்லையென்றால், அந்தச் சொத்தை ஒரு நபர் இழக்க நேர்ந்தாலும் அதனை வற்புறுத்தி உரிமையாக்குவதற்கு அல்லது கேட்டுப் பெறுவதர்குரியதாகக் கருத முடியாது.

*(2பி) 2* ஆவது கூறில் குறிப்பிட்டுள்ள சட்டத்தை *19* -வது கோட்பாட்டின் *(1)* ஆவது கூறின் *(ஊ)* கிளைக் கூறில் உள்ளவை பாதிப்பதாக எடுத்தக் கொள்ளக் கூடாது.

*(3) (2)* ஆவது கூறில் குறிப்பிட்டுள்ள ஒரு சட்டத்தை ஒரு மாநில சட்ட மன்றம் நிறைவேற்றியிறுக்கிறது. அந்த சட்டம் குடியரசுத் தலைவரின் ஒப்பு தாலுக்காக அனுப்பப்புட வேண்டும். அத்தகைய ஒப்புதலைப் பெறுவதற்கு முன்னர் அந்தச் சட்டத்தின் அதிகாரங்களைச் செயல்படுத்தக்கூடாது.

*(4)* இந்த அரசியல் சாசனம் அமல்படுத்தப்படுவதற்கு முன்னர், ஏதாவது ஒரு சட்ட்ம் ஒரு மாநில சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டு, அதனைக் குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்குப் பிறகு அவரது ஒப்புதலைப் பெற்றிருந்தால், இந்த அரசியல் சாசனத்தில் யாது கூறப்பட்டிருப்பினும், அத்தகைய சட்டத்தை *(2)* ஆவது கூறில் உள்ளவற்றுக்கு முரணாக இருக்கிறது என்று காரணம் காட்டி எந்த நீதிமன்றத்திலும் எத்தகைய கேள்வியும் கேட்க முடியாது.

**(தொடரும்)...- வழக்குரைஞர் பழனிச்சாமி, செங்கை**



படிப்பகம்

www.padippakam.com

## இனியொரு யுகம் செய்வோம்!

**திட்டம்** : *101* **செயல்** : 3

**நிறுவன-ஆசிரியர்**
எல்.யேசுமரியான்

**ஆசிரியர் குழு**
சிந்தை ராஜன்
பட்டி தமிழ்விரும்பி
களப்பிரியா
விடுதலை நெஞ்சன்

**உரிமை மற்றும் வெளியிடுபவர்**
ஜி. கோபிநாதன்
67, கெனால் தெரு,
சி.பி. ரோடு,
சென்னை 600 021

**அச்சிட்டோர்**
நவஜோதி அச்சகம்
சென்னை-600 002.

**படைப்புகள், சந்தா மற்றும் தொடர்புகளுக்கு**

எம். ஜெ. நாயகம்
**நிர்வாகி**
21டி/1,திருக்கழுகுன்றம் ரோடு,
செங்கல்பட்டு-603 002.

# களம் காணும் நெஞ்சங்களே!

உண்ணும் உணவை வைத்து உயர்ந்தவன் என்றும் தாழ்ந்தவன் என்றும் மனிதர்களைக் கூறும்போதும் அவலநிலை இந்தியாவில் மட்டுமே காணமுடிகிறது.

"பாம்பு சாப்பிடும் ஊருக்கு போனால் நடு கண்டமாய் கேட்க வேண்டும்" என்ற பழமொழி நிலவும் இந்த சமுதாயத்தில் "மாட்டு இறைச்சியை மட்டும்" வெளிப்படையாக இழிவான உணவாக கருதுவது சாதியின் சதி.

மலிவான விலையில், எளிதில் கிடைக்கக்கூடிய, நிறைந்த சத்துள்ள மாட்டிறைச்சியை உண்ணுவதால் உழைக்கும் மக்களைத் தீண்டத்தகாதவர்களாக மாற்றியதை வரலாறு மன்னிக்காது. இதை எதிர்க்கும் வண்ணம், உழைக்கும் மக்கள் பண்பாட்டை உறுதிபடுத்த "மாட்டுக்கறியைத் தின்னுவோம் மானத்தோடு வாழுவோம்" என்ற முழக்கத்தை முன்வைத்து அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம். காஞ்சி மாவட்டம், கேளம்பாக்கத்தில் *1990* ஆம் ஆண்டு நந்தனார் நகரை உருவாக்கியபோது அங்கு ஏ*1* மாட்டிறைச்சி கடையைத் திறந்து வைத்து இந்த முழக்கத்தை அரங்கேற்றினார்கள் இயக்க தோழர்கள்.

*23-7-2000* அன்று காஞ்சியில் ஒரு மாநாடு நடைபெற்றது. "கறிக்காகப் பசுக்கள் கொல்லப்படுவதைத் தடுத்தாக வேண்டும், அதற்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம்." என அம்மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது அப்படியென்றால் (பசு) மாட்டிறைச்சி உண்பவர்களைக் கொன்றும் தீர்க்கலாம் என்று மறைமுகமாகக் கட்டளையிட்டுள்ளனர். இன்று மாட்டிறைச்சியை பலதரப்பினர் உண்டாலும் தலித் சமுதாயத்தின் வெளிப்படையான உணவு மாட்டிறைச்சி. எனவே இத்தீர்மானம் தலித் சமுதாயத்தை அழிக்கக்கூடியது. மாட்டிறைச்சி உண்ணும் அனைவருக்கும் எதிரானது.

"பசுவதை" என்று கண்ணீர் வடிப்பவர்கள் மனிதர்கள் வதைப்பட்டு மடியும்போது வாயைத்திறப்பதில்லை. மாறாக "என்னைக் கைது செய்தால் மும்பை நகரமே எரியும்" என்று கூறி எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவார்கள், அயோத்தி கலவரத்தை நியாயப்படுத்துவார்கள் பால்தாக்ரேக்கள்.

எனவே களத்தில் உள்ளவர்கள் இந்த "மாட்டு - அரசியலில்" எச்சரிக்கையாக இருக்கவேண்டும். "மாடுகள்புனிதமானது". அதைக்காப்போம் என்று அவர்கள் கர்ஜிப்பதால் அத்தகைய "புனிதங்கள்" இறந்தால் அவைகளை இத்தீர்மானங்கள் நிறைவேற்றிய உத்தம புருஷர்கள் வீட்டிற்குமுன் புதைப்போம்.

**என்றும் களம் நிற்கும்**

எல். யேசுமரியான்

www.padippakam.com



# நாறும் நகராட்சி

குப்பைதொட்டி ஊழலில் முதன்முதலில் தன்னை இவ்வுலகிற்கு அறிமுகப்பத்தியது முதல் இன்றுவரை ஊழலில் பெயரெடுத்த ஒரே நகராட்சி வந்தவாசி என்றால் அது மிகையாகாது. நகராட்சி துவங்கப்பட்டதிலிருந்தே தனக்குள்ள பெருமையை ஊழலின் மூலம் வெளிப்படுத்தியது இந்த நகராட்சி மட்டுமே. ஊழலில் திளைத்து போன இந்த நாட்டில் வந்தவாசி நகராட்சியை மட்டும் குறை சொல்வது நமது நோக்கமல்ல திருடனில் நல்ல திருடன் கெட்ட திருடன் எவன் என்பதை தேர்ந்தெடுக்கும் பொறுப்பு நம்மை சார்ந்ததல்ல.

ஆனால், நல்லவனோ, கெட்டவனோ தாழ்த்தப்பட்ட மக்களை குறிவைத்து தாக்கி அழித்து கொண்டிருக்கும் எவனும் நம்முடைய குறியிலிருந்து தப்பமுடியாது.

நகராட்சிகளிலும் பேரூராட்சிகளிலும் பணிபுரியும் பெரும்பாலான தாழ்த்தப்பட்ட மக்கள் தினந்தோறும் நேரத்திற்கு வந்து கையெழுத்து போட்டுவிட்டு முதல் தேதியானால் கை நிறைய சம்பளம் வாங்குபவர்கள் அல்ல. என்பது உலகமறிந்த செய்தி. இரவு பகலாக ஊரை சுத்தம் செய்வதும், மலம் அள்ளுவதும், கழிவுகளை அகற்றுவதுமே இம்மக்களின் தொழில.

ஆனால் இவர்கள் வசிக்கும் பகுதியோ கேட்க நாதியற்று நாறிபோயுள்ளது. பொதுவாகவே தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதி ஒதுக்குபுறத்தில் அமைந்திருப்பதை போலவே நகராட்சியில் கடைநிலை ஊழியர்களாக ஊரை சுத்தம் செய்பவர்களின் குடியிருப்பும் நகரத்தில் உள்ள கழிவுகள் கொட்டப்படும் பகுதியில்தான் அமைந்துள்ளது. இதைப்பற்றி நகராட்சி கண்டு கொள்வதாக தெரியவில்லை.

நகராட்சியில் பணிபுரிபவர்களுக்கு அரசு குடியிருப்புகள் கட்டி தரவேண்டும் என்பது சட்டம்., ஆனால் துப்புரவு பணி செய்யும் நகராட்சி ஊழியர்களுக்கு இன்னும் வீட்டுமனைப்பட்டா கூட இதுவரை கிடைக்கவில்லை. இதுசம்பந்தமாக பல மனுக்கள், போராட்டடங்கள் நடத்தியும் நகராட்சி நிர்வாகமோ சரி, அரசாங்கமோ நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாள, நகராட்சியில் காலியான பணியிடங்களை நிரப்புவதற்காக 50 ஆயிரம், வரை பேரம் பேசுவதற்கே நேரம் சரியாக இருக்கிறது.

இந்த ஊழியர்கள் நகராட்சி நிர்வாகத்தினால் பாதுகாக்கப்படுவதற்கு பதிலாக நாளுக்கு நாள் சுரண்ட படுவதே அதிகம். வந்தவாசி நகராட்சி பேரூராட்சியாக இருந்த காலத்திலிருந்து இன்றுவரை பல ஆண்டுகளாக பணிபுரியும் பல துப்புரவு பணியாளர்களின் புலம்பல்கள் ஏராளம். அதில் ஒரு பெண் "சார், நாங்க இந்த நகராட்சியில் பல ஆண்டுகளாக துப்புரவு பணியாளர்களா வேல செஞ்சுகினு வரோம். எங்களுக்கு வேலை செய்வதற்கு நேரம் காலம் கிடையாது. திடீரென்று ராத்திரி வரைக்கும் ஊரை சுத்தம் செய்ய வேண்டும் என்று சொல்வார்கள். நாங்களும் அவங்க சொல்றபடி சுத்தம் செய்யனும் இதற்காக கூடுதல் ஊதியமோ, பாதுகாப்போ கிடையாது."

ராத்திரியில எது நடந்தாலும் அதுக்கு நாங்களேதான் பொறுப்பேற்க வேண்டும். ஊரிலுள்ள எல்லா கழிவுகளையும் அள்ளி வாரிப்போடும் எங்களுக்கு அடிக்கடி பல தொற்றுநோய்கள் வரும். இதற்காக கையுறையோ அல்லது வேறு எந்த பாதுகாப்பான பொருட்களோ கொடுப்பதில்லை. அதே போல எங்கள்ல பலபேரு 25 வருஷத்துக்கும் மேல பெருக்குற வேலைய செஞ்சுகுனு இருக்கோம், ஆனா



படிப்பகம்

www.padippakam.com

எங்களுக்கு பதவி உயர்வோ, எந்த சலுகையோ கிடையது என அடுக்கினார்.

"வந்தவாசி நகராட்சி ஆனதிலிருந்து எங்களுக்காகவே கொடுக்கப்பட்ட துப்புரவு பணியைக்கூட அரசு சம்பளம் என்கிறதால அவங்க சாதியிலிருக்கும் இளைஞர்களுக்கே வேலை கொடுக்கிறாங்க, நாங்க போயி கேட்டா வேணும்னா ஐம்பதாயிரம் ரூபாய் எடுத்தாந்து கொடுன்னு சொல்றாங்க. அவ்வளவு பணத்துக்கு நாங்க எங்க போறது. இதனால இங்குள்ள இளைஞருங்க நகராட்சியில் துப்புரவு பணிக்காக காத்திருந்துவிட்டு லாரியிலோ, பட்டறையிலோ கூலிவேலைக்கு போறாங்க. துப்புரவு பணிக்காக பணியில் சேரும் சாதி இந்துக்கள் பேருக்குதான் துப்புரவு பணியாளர்களே தவிர அந்த வேலையை நாங்கதான் சேர்தது செய்றோம்." என புலம்பினார் பெரியவர் ஒருவர்.





வீட்டிற்குள் நுழையும் சாக்கடை

வாழ்க்கையே கேள்விக்குறியாகிவிட்ட இந்த பணியாளர்களுக்கு தங்களுடைய வாழ்க்கையை ஒட்டுவதற்கு தின பைனான்ஸ்காரர்களையும், கந்து வட்டிககாரர்களையும் எதிர்பார்க்க வேண்டிய கட்டாயமாகிவிட்டது. நகராட்சியில் வேலையில் சேருவதற்கு ஐம்பதாயிரத்திற்கும் மேலாக கப்பம்கட்ட வேண்டியுள்ளதால் நூற்றுக்கு இருபதுரூபாய் வரையில் வட்டிக்கு கடன் கொடுப்பவர்களை அணுகவேண்டிய சூழ்நிலை. இதனால் இங்கு பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு சம்பள தேதியானால் துயர நாளாக மாறிவிடும் அபாயநிலை. மேலும் வருகின்ற மாதத்தில் குடும்பம் நடத்துவதற்கு மீண்டும் வட்டி கொடுப்பவர்களிடம் படையெடுக்கின்றனர். இதனால் நாளுக்குநாள் இவர்களுடைய கடன் சுமை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

"ஊரையே சுத்தம் செய்யும் எங்கள் பகுதியவந்து பாருங்க சார். பக்கத்துல ரைஸ் மில்லிலிருந்து வரும் கழிவு, பக்கத்தில் உள்ள பெண்கள் தங்கும் விடுதியிலிருந்து வரும் மனித கழிவுகள் எங்கள் தெருவழியாகத்தான் செல்கின்றது. அதற்கு தகுந்த வாய்க்காலோ சுகாதார வசதியோ கிடையாது. இதனால் மழைக்காலத்தில் இந்த கழிவுகள் அனைத்தும் எங்க வீட்டுக்குள்ள புகுந்துவிடும். இதனால எங்க பகுதியில பல பேருக்கு வாந்தி, பேதி, வந்து செத்து இருக்காங்க!." என தங்களுடைய நரக வாழ்க்கையை எடுத்துரைத்தார் இளைஞர் ஒருவர்.

மேலும் அவர் "இவ்வளவு நாட்களாக தமிழக அரசோ, நகராட்சியோ, எங்களை கண்டு கொண்டதாக தெரியவில்லை. அதனால் நாங்கள் அம்பேத்கர் அவர்களின் பெயரால் ஒருங்கிணைந்துள்ளோம். இனி நாங்கள் எங்கள் உரிமைகளை போராட்டத்தின் மூலம் மட்டுமே வென்றெடுப்போம்." என நெத்தியடி கொடுத்தார்.

இனியாவது ஆட்சியாளர்களும், அதிகாரத்தில் உள்ளவர்களும், துப்பரவு பணி செய்யும் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கும் உத்திரவாதம் கொடுத்தால்தான் அவர்கள் அமர்ந்துள்ள நாற்காலிகளுக்கு உத்திரவாதம் என்பது நாம் அறிந்தவரை தெரிகின்றது.

**சிந்தை. ஆர்**



படிப்பகம்

www.padippakam.com

# டி-ஆர்-ஓவுக்கு டிமிக்கு கொடுத்த அரசியல்வாதிகள்...!

தமிழகத்தின் தலைநகரான சென்னைக்கு அடுத்துள்ள மாவட்டமான காஞ்சிபுரம் மாவட்டம் ஏரிகள் மற்றும் அரசு புறம்போக்கு நிலங்கள் அதிகமுள்ள மாவட்டமாகும். இந்த மாவட்டத்தில் பெரும்பாலும் ஏழை மக்கள்தான் அதிகமாக வசிக்கின்றனர். அதிலும் குறிப்பாக தலித் விவசாய மக்களும், நிலமற்ற மக்களும் பெரும்பாலும் வாழ்ந்து வருகின்றனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தின் வருவாய் அதிகாரியாக இருந்து வந்த சகாயம் அதிரடி மாற்றத்திற்கு ஆளானார். இதனால் இம்மாவட்டத்தை சேர்ந்த ஏழை மக்கள் போராட்டத்தில் குதித்தனர்.

ஒரு அதிகாரி மாற்றத்திற்கும் ஏழை மக்கள் போராடுவதற்கும் என்ன காரணம் இருக்க முடியும் என்பதை அறிய களம் இறங்கினோம்.

இத்துறையில் இம்மாவட்டத்தில் வருவாய் அதிகாரியாக வந்தவர்களில் திரு. சகாயம் மட்டும்தான் நேர்மையான அதிகாரி என அனைத்து தரப்பு மக்களாலும் போற்றப்பட்டார்.

இவர் மாவட்ட வருவாய் அதிகாரியாக வந்தபிறகுதான் ஓரளவு இத்துறையில் லஞ்ச லாவண்யம் குறைய தொடங்கியது என்பது மக்கள் தெரிந்துகொண்ட உண்மை.

தற்போது நிலமற்ற ஏழை மக்களுக்கு புறம்போக்கு நிலத்தில் உடனடியாக பட்டா போட்டு கொடுக்க வேண்டும் என்று தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது.-எனவே வீட்டு மனைப்பட்டா இல்லாமல் புறம்போக்கில் குடிசை அமைத்துள்ள பெருபாலான தலித் மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்கநடவடிக்கை எடுத்தார்.

இது சம்பந்தமாக அந்த துறையில் உள்ள தாசில்தார் உள்பட அனைத்து தரப்பு அதிகாரிகளுக்கும் வீட்டுமனை பட்டா சம்பந்தமாக யாரிடமும் ஒரு பைசா வாங்கக்கூடாது என கண்டிப்பாக உத்தரவு பிறப்பித்தார்.


சகாயம்

இலவச வீட்டு மனை திட்டத்தின் மூலம் பல லட்சங்கள் எதிர்பார்த்திருந்த அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளுக்கு இது ஒரு பெரிய ஏமாற்றத்தை உண்டாக்கியது. இதே மாவட்டத்தில் புள்ளலூர் என்ற கிராமத்தில் ஏழை தலித் மக்களுக்கு கொடுக்கப்பட இருந்த 150 ஏக்கர் புறம்போக்கு அரசு நிலத்தை தற்போது தமிழக காவல்துறை டிஐஜி ஒருவரின் உறவினர் சுமார் 100 ஏக்கர், ஒரு சில அரசியல்வாதிகள் மூலம் மடக்கிபோட்டுவிட்டார்.

இதை அறிந்ததும் உடன் வீட்டு மனை இல்லாத தலித் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை ஆக்கரமிப்பு செய்ததை உடனடியாக அகற்ற நடவடிக்கை மேற்கொண்டார் டி.ஆர்.ஓ சகாயம்.

அப்போது மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக இருந்த சைலேந்திரபாபு நேரடியாகவே தலையிட்டு உயர் அதிகாரி சம்பந்தப்பட்ட இந்த நிலத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என கண்டிப்பாக கூறியுள்ளர்.

இதையும் பொருட்படுத்தாது, இதில் ஆக்கிரமிப்புகளை அகற்றி தலித் மக்களுக்கு பட்டா போட்டு கொடுக்க அதிகாரிகளுக்கு உத்திரவிட்டுள்ளார்.

இதனால் பல லட்சங்களை எதிர்பார்த்திருந்த அரசு அதிகாரிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும்

8ம் பக்கம் பார்க்க...



படிப்பகம்

www.padippakam.com

# பரிதவிக்கும்





# பழங்குடியினர்

பதவி

இன்றைக்கு இந்தியா சுதந்திரம் அடைந்து 53 -வது சுதந்திர தின விழாவை கொண்டாடி விட்ட நிலையில்

சுதந்திரம் என்ன என்பதை கூட தெரிந்துக் கொள்ள முடியாத நிலையில் இருளர் எனப்படும் பழங்குடியினர் இன்னும் அடிமை இனமாகவே அடக்கப்பட்டு வருகிறது

இந்த பழங்குடியினர்கள் தமிழ் நாட்டில் சுமார் 6 -லட்சம் பேர் உள்ளனர் இவர்கள் காடுகளிலும், நிலங்களிலும் மலை ஏரி போன்ற இடங்களில் ஒதுங்கி வாழ்ந்து வருகிறார்கள்.

இந்த பழங்குடியினரை - மண்ணின் மக்களை சாதி இந்துக்கள் குற்றப் பரம்பரையினராக உருவாக்கி ஒதுக்கி வைத்து விட்டனர். இதனை ஆங்கிலேயர்கள் ஆட்சி காலத்தில் அங்கிகரித்து சட்டமாகவே கொண்டு வந்தனர் பின்னர் 1952-ம் ஆண்டு இந்த சட்டம் நீக்கப்பட்டுவிட்டது.

இருந்த போதிலும் மனித சமுதாயத்தில் அடி மட்டத்தில் உள்ள இவர்கள் மனிதர்களாகவே மதிக்கப் படாமல் காட்டு பகுதியிலும் ஒதக்குபுறத்திலும் அடிமைகளாகவும் குற்ற பரம்பரையினர்களாகவும் கருதி கொடுமை படுத்துகின்றனர்.

இந்த இனத்து பெண்களை பாலியல் கொடுமை, மற்றும் பல கொடுமைகள் செய்வதும், காரணமின்றி காவல் துறையும் அவர்கள் மீது பொய் வழக்கு போடுவதும் அவர்களின் உழைப்பையும் அடிப்படை உரிமைகளையும் அடிமைதனம் படுத்தி முடக்குவதும் தொடர்ந்த நிலையில் இருளர் சமுதாய உள்ளது.

ஒவ்வொரு நாளும் செத்து பிழைப்பது தான் பழங்குடி இன மக்களின் வாழ்க்கை. இவர்களுக்கென்று நிரந்தரமாக வீடு கிடையாது. அரசாங்கம் இவர்களை ஒரு பொருட்டாக கருதுவதும் கிடையாது. அப்படியே வீடுகள் இருந்தாலும் நினைத்து பார்க்க முடியாத அளவிற்கு சிறியதாக உள்ளது. இந்த மக்கள் பட்டாவிற்காக பாடாய் படுவது வாடிக்கை.

பழங்குடி இன குடியிருப்புக்கள் ஊரின் ஒதுக்குபுறத்திலும், காட்டோரங்களிலும் தான் உள்ளன. ஆனால் அவர்களுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர், தெருவிளக்கு, சாலை வசதி போன்றவை மருந்துக்கு கூட இல்லாததுதான் வேதனை.

பழங்குடி இன மக்களுக்கும் இவர்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்திற்கும் அரசு பல சலுகைகள் கொடுப்பதாக பிதற்றிக் கொண்டாலும் இந்த மக்கள் இந்த சலுகைகளை பெற முடிவதில்லை. சாதி இந்துக்கள் பலர் பழங்குடி இனத்தினர் என்ற சான்றிதழ் பெற்றுக் கொண்டு பல சலுகைகளை அனுபவத்துக் கொண்டு வருகின்றனர் என்பது நம்முடைய விசாரணையில் தெரிய வந்தது.

ஆனால் இதே பழங்குடி மக்கள் அவர்களுக்கான சான்றிதழை உடனடியாகப் பெற முடிவதில்லை. செங்கல்பட்டு அருகே எச்சூர் பகுதியில் ஒரு பழங்குடியின மாணவி கல்லூரியில் சேருவதற்கு சான்றிதழுக்காக விண்ணப்பம் செய்தார். ஆனால் அந்த மாணவி மூன்று ஆண்டுகள் கல்லூரி பட்ட படிப்பை முடித்த பிறகே அவருடைய சான்றிதழ்



படிப்பகம்

www.padippakam.com

கிடைத்தது. இதுபோன்று பெரும்பாலும் ஆண்டுக்கணக்கில் காத்திருந்த பிறகே சான்றிதழ் கிடைக்கின்றது.

பழங்குடியின மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க பல இயக்கங்களும், தொண்டு நிறுவனங்களும் செயல்பட்டு வருகின்றன. இவைகளின் செயல்பாடுகளை நம்மிடம் குறிப்பிடுகிறார் எச்சூரை சேர்ந்த **ஐகதா** என்ற பெண்., "நாங்க மத்த சாதிக்காரங்களை விட கொஞ்சம் பேருதான் இருக்கோம். அதனால நாங்க அவங்களுக்கு பயந்துதான் வாழறோம். எங்களுக்கு எந்தவிதத்திலும் பாதுகாப்பு கிடையாது. இந்த சமயத்தில எங்க சாதிக்கு நல்லது செய்றேன்னு சொல்லிக்கினு பல தொண்டு நிறுவனங்கள் எங்க மக்கள கூறு போடறாங்க. இதனால எங்களுக்குள்ளேயே ஒத்துமை இல்லாம போயிடுது. ஆனால எங்க மக்கள் எந்த வளர்ச்சியும் கண்டதில்ல. சொசைட்டிகாரங்கதான் வளந்துக்கினு போறாங்க. இதல நான் எல்லா சாசைட்டிகாரங்களையும் குறை சொல்லல. எங்களுக்காக உழைக்கிறதா சொல்லிக்கிற சொசைட்டிக்காரங்க அத்தனைபேரும் உயர்ந்த சாதிக்காரங்கதான்.

*அரசாங்கத்தின் மூலம் நியமிக்கப்படும் பழங்குடி நலக்குழு உறுப்பினர் பதவிக்கு பாலு என்பவர்தான் உள்ளார் இவரு உயர்ந்த சாதிக்காரா ஆனா பழங்குடி பாலு என்று பெயர் வைத்துக் கொண்டு, எங்கள் மக்கள் மேல பல லோனு போட்டு அவரு அனுபவிச்சக்கினு வராரு.*

*அதே போல தண்டரை கிருஷ்ணன் என்ற சாதி இந்து இருளர் பெண்கள் முன்னேற்ற சங்கம் வைத்துள்ளார், ஆனால் வேலை செய்றதுக்கு கூட எங்க ஆட்களை வைச்சுகிறது கிடையாது.*

இதுபோல எங்களை சொல்லி சொத்து சேக்கரவங்க தான் அதிகம் அவங்க எங்களுக்கு உதவி செய்யவிட்டாலும் உபத்திரம் செய்யாம இருந்தா நல்லது என தங்களுடைய மனக்குமுறல்களை கொட்டினார்.

பழங்குடி இருளர் மக்கள் மீது வன்கொடுமைகள் தொடர்ந்து கொண்டே போகின்றன. பெண்கள் கற்பழிக்கப்பட்டுகின்றனர். பலர் கொலை செய்யபடுகின்றனர்.

21 -ம் நூற்றாண்டிலாவது விடிவு பிறக்குமாஎன காத்து தவித்து நிற்கின்றனர்.

---

.....6-ம் பக்க தொடர்ச்சி

**ஏமாற்றத்தை தந்தது. ஏழை தலித் மக்களின் நலன்களில் அக்கறை கொண்டு உண்மையாக சேவை செய்து வந்த மாவட்ட வருவாய் அதிகாரி சகாயத்தை மாற்ற அதிரடி நடவடிக்கைகளில் இறங்கினர். இவர்கள்! அப்படியே மாற்றவும் பட்டார். இது பலருடைய எதிர்ப்பையும் உருவாக்கியது. அதனால் செப்டம்பர் 6-ஆம் தேதி வரை மாவட்டம் எங்கும் போராட்டங்கள் நடத்தக்கூடாது என போலிஸ் கூட்டம் பிரிவு 30(2)கீழ் உத்தரவிடப்பட்டள்ளது. எனவேதான் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம் போராட்டத்திற்குக் கொடுத்த மனு நிராகரிப்பட்டது**



**சைலேந்திர பாபு**

**ஒரு இலவச வீட்டுமனை பட்டாவிற்கு 3 ஆயிரம் ரூபாய் எதிர்பார்த்து இருந்த வருவாய் துறையை சேர்ந்தவர்களும் அந்த பகுதியை சேர்ந்த அரசியல்வாதிக்களுக்கும் ஏமாற்றத்தை உண்டாக்கியது.**

**இந்த அதிரடி நடவடிக்கையால் அதிர்ந்துபோன சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளும், அரசியல்வாதிக்களும் இதுபோன்ற அதிகாரி இருந்தால் நம்மால் குப்பை கொட்ட முடியாது என திட்டமிட்டு நேர்மையாக செயலாற்றிய டி.ஆர்.ஓ சகாயம் அவர்களை மாவட்டத்தை விட்டு காலி செய்வதற்கு காய் நகர்த்தி வெற்றியும் கண்டனர்.**

**சமுதாயத்தில் பின்தங்கிய மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய உரிமைகளை வழங்கும் சகாயம் போன்ற அதிகாரிகளுக்கு இழைக்கப்படும் இந்த தண்டனைகளை தலித்துகளையும் பின்தங்கிய வகுப்பினரையும் எழுச்சியடைய செய்யுமே ஒழிய அடக்கிவிட முடியாது என்பதை அதிகார வர்க்கம் புரிந்துகொண்டால் சரி.**

**-பதவி**



படிப்பகம்

www.padippakam.com

# அம்பேத்கரை - கொல்ல சதி



இப்போது அப்பேத்கர் மீது ஆர்.எஸ்.எஸ்காரர்களுக்கு புதிய "பக்தி" வந்திருக்கிறது! நான் இந்துவாக பிறந்தாலும் - ஒரு இந்துவாக சாக மாட்டேன் என்று பிரகடனப் படுத்தி விட்டு தனது தொண்டர்களுடன் இந்து மதத்துக்கு முழுக்கு போட்டுவிட்டு புத்தமார்கத்தில் சேர்ந்தவர் டாக்டர் அம்பேத்கர்.

புத்த மதத்தைக் கடுமையாக எதிர்த்தவர்கள் ஆர்.எஸ்.எஸ் காரர்கள். இந்து மதத்தின் சாதி அமைப்பை புத்தமதம் தகர்த்து எறிந்து விட்டது : சாதி அமைப்பு தகர்ந்து போனதால் தான் வட கிழக்கு மாநிலங்களில் முஸ்லீம் மதம் செல்வாக்குப் பெற்றுவிட்டது என்று கோல்வாக்கர் தனது நூலில் குறிப்பிடுகிறார்!

இப்போது நான் இந்தியாவில் மிக வெறுக்கப்படுகிற மனிதனாக இருக்கிறேன். என்னை இந்துக்களின் எதிரி என்கிறார்கள். இந்துயிசத்தை அழிக்க வந்தவன் என்றார்கள். இந்த நாட்டின் மிகப் பெரிய எதிரி என்கிறார்கள் என்று டாக்டர் அம்பேத்கார் அவர்களே மனம் குமுறி சொன்னார். (ஆதாரம் : தனஞ்செய்கீர் எழுதிய ( **Ambedkar Life and Mission** நூலில் ) அப்படிப்பட்ட டாக்டர் அம்பேத்கர் அவர்களைத் தீர்த்து கட்டும் ஒரு சதி முயற்சி நடந்தது.

அம்பேத்கரின் நெருங்கிய நண்பரும் - இந்திய குடியரசு கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பெல்காமைச் சார்ந்த டி.ஏ. காட்டி ( **D.A. Katti** ) ஒரு திடுக்கிடும் தகவலை வெளியிடுகிறார். 2-2-1980 -ல் பெங்களூரில் அம்பேத்கர் கல்லூரியில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் அவர் பேசினார். அவர் தெரிவித்த விவரம் இதுதான்.

வீர சவர்க்காரின் தம்பி பாபா சவர்க்கார் நாசிக் பீட ஜகத்குருவிடம், தமக்கு 500 ரூபாய் லஞ்சம் தர வேண்டும் என்று கேட்டார்! அந்த பணம் அம்பேத்காரின் சமையல்காரருக்கு லஞ்சமாக தர கேட்கப்பட்ட பணம்! அதாவது அம்பேத்கர் சாப்பிடும் உணவில் விஷம் கலந்து கொடுத்து சாகடிக்க அவரது சமயற்காரரிடம் ரூ 500 லஞ்சம் கொடுக்க பாபா சவர்க்கர் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார். ஆனால் சங்கராச்சாரி இதற்கு பணம் தர மறுத்து விட்டார். இத்தகவலை பிரபல மராத்திய எழுத்தாளர் - நாடக ஆசிரியரான பி. கே. அட்ரி ( **P.K. Atre**) அவர் நடத்திய மராத்தா என்று மராத்திய நாளிதழில் வெளியிட்டார்.

காந்தியார் கொலையில் குற்றம் சாட்டப்பட்டிருந்த வீர சவர்காரின் தம்பி பாபா சவர்க்கார். ஆர்.எஸ்.எஸ். சை துவக்கிய அய்வர் குழுவில் ஒருவரான சித்பவன் பார்ப்பனராவர்.

(தலித் வாய்ஸ்16.4.82) இதழில் எடுக்கப்பட்து)

அதுமட்டுமல்ல - கோவில் நுழைவுப் பரோராட்டம் நடத்தியபோது அம்பேத்கரை கொல்ல சதித் திட்டம் தீட்டப்பட்டது என்ற தகவலையும் டி.ஏ. காட்டி தனது உரையில் வெளியிட்டிருக்கிறார்! இந்த சதிக்காரர்கள் கூட்டம் தான் இன்றைக்கு அம்பேத்கருக்கு விழா எடுத்துக் கொண்டிருக்கின்றன!

அன்றைக்கு காங்கிரஸ் கட்சியிலே முன்னணியிலே இருந்து பல தேசியத் தலைவர்களின் படங்களை அவ்வப்போது துப்பாக்கியால் சுட்டு - இவர்கள் பயிற்ச்சி எடுத்துக் கொண்டிருந்தார்கள் என்ற தகவலை காந்தியாரின் உதவியாளராக இருந்த காந்தியார் வாழ்க்கை சரித்திரத்தை எழுதிய பியாரிலால் தனது நூலில் குறிப்பிடுகிறார்!

அந்த காலங்களில் மட்டுமல்ல: இந்த காலத்திலும் கூட இவர்களின் தீர்த்துக் கட்டும் சதிவேலை முயற்சிகள் நடந்து கொண்டதான் இருக்கிறன.


விடுதலை ராஜேந்திரன்/



படிப்பகம்

www.padippakam.com

# மாட்டை காத்திட மனித இரத்தமா



-நவயுகன்

கடந்த ஜுலை 23-ந் தேதி காஞ்சி காமாட்சி கல்யாண மண்டபத்தில் “பசுவை காப்போம்” என்ற பெயரால் அகில இந்திய மாநாடு கூடியது.

கோ சாம்ராக்ஷன் சங்கம் நடத்திய இதில் இந்திராவின் மருமகளும், பிஜேபி அரசியலில் பங்கு வகிக்கும் மேனகா காந்தி, இந்துத்வா வெறியை பரப்பி வரும் அசோக் சிங்கால், காம கோடி பீடாதிபதி ஜெகத்குரு என்று பட்டம் சூட்டிக் கொண்டுள்ள சங்கராச்சாரிகள் டு வும் த்ரீயும் கலந்து கொண்டனர்.

பசு மாட்டை காக்க வந்ததாக கூக்குரல் போட்டது இந்த காவிப்படை.

பசு வதையை பற்றி பேசிய இவர்கள் மாட்டு இறைச்சியையே உணவு பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்று இந்திய அரசை மிரட்டியும் தீர்மானமும் நிறைவேற்றினர். உணவு பழக்கம் என்பது தனி மனிதனின் உரிமை அதில் தலையிடுவதற்கும் ; தடுப்பதற்கும் எந்த சன்னியாசிக்கும் உரிமையில்லை.

உலகம் முழுவதும் மாட்டிறைச்சி என்பது பொதுவான உணவு. எந்த நாட்டிலும் அது அருவருப்பான விஷயமல்ல.

நாய் இறைச்சி நேபாளத்தினருக்கு ருசியான உணவு, ரஷ்யாவிலோ குதிரை பாலும், கறியும் தான் பிரமாதமான பதார்த்தம் காங்கோவில் யானையையே விழுங்குவது வழக்கம், அரபு நாடுகளில் ஒட்டகத்தின் தசையும், பாலும் தவிர்க்க முடியாதது, மங்கோலிய இனத்தினரோ பாம்பையும், கரப்பான், தவளைகளை கூட விட்டு வைப்பதில்லை.

மேற்கு வங்கத்தில் பிராமணர்கள் புறம் தள்ளாத மீன் குழம்பு தமிழக பார்ப்பணர்களுக்கோ. இயந்திரம் மூலம் பொறிக்கும் முட்டை வெஜிடேரின் ஆன கதையும் உண்டு.

குழந்தை கறி சமைத்து உண்ட சிவனும், குதிரை மாமிசமும் கள்ளை உண்ட ராமனும் புராண சாட்சிகள் அல்லவா?

நரமாமிசம் தின்ற பார்வதியின் சரிபாதியான சிவனை விட மாட்டிறைச்சியை உணவாக கொள்ளும் இந்தியர்களால் ஒரு பகுதியினர் மட்டும் இழிபிறவிகளாம், தீண்டதகாதவர்களாம்.

அன்பே சிவம் என வாய் முணு முணுக்கும் இந்த கபோதிகளால் கழுமரத்தில் ஏற்றி இரண்டாக கிழித்தெரியப்பட்ட சமண, பௌத்த துறவிகள் எத்தனை ஆயிரம் பேர்.

இந்து மதத்தை, சைவத்தை காப்போம் என்ற பெயரால் ஆடிய கொடிய ருத்ர தாண்டவத்தை மறக்க முடியுமா என்ன?

மனித குணங்களை சாத்வீகம், ராஜஸம், தாமஸம் என மூன்றாக கூறுபோடும் கீதை சாத்வீக மானவர்கள் தேவதைகளை ஆராதித்து ஆரோக்கியம், பலம் தரும், சுகமான ஈரபசை உள்ள உணவையே உட்கொள்வர்களாம்.

ராஜஸ குணம் உடைய நபர்களோ புளிப்பு, உப்பு, காரம், சூடாக கொதிக்க கொதிக்க சாப்பிட்டு ராட்சஷர்களை வணங்குவார்களாம்.

தாமஸ குணவாதிகளோ பிணம், பூதங்களை பூஜித்து, வேகாத, நாற்றம் அடிக்கும், எச்சிலான தீண்டதகாத மாமிசம், மீன்கள், சாராயத்தை உணவாக கொள்வூார்களாம்.

அதன் அடிப்படையிலேயே அவர்களுடைய குணங்களும் சாத்வீக புத்தி, ராஜஸபுத்தி தாமஸபுத்தி என அறிவு வளர்ச்சியையும் மூன்றாக பிரித்துள்ளது இந்து மதம்.

இன்று உலகம் முழுவதும் மாமிச உணவை



படிப்பகம்

www.padippakam.com

சாப்பிடுபவர்களின் எண்ணிக்கை 95 சதம்

தட்ப வெட்ப நிலைக் கேற்ப கொழுப்பு சத்து நிறைந்த மாமிசத்தை சாப்பிட்டே ஆக வேண்டும் நிலை பல நாடுகளில் கட்டாயம். அங்கே உயிர் வாழ்வதற்கே மாமிசமும் குளிர் தாங்க சாராயத்தையும் (ஸ்பிரிட்) சாப்பிடுவது அவசியம்.

உலகையே தலைகீழாக மாற்றிய உலகம் உருண்டை, புவிஈர்ப்பு விசையை கண்டுபிடித்த கலிலேயாவும், மின் விளக்கை கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசன், சார்பியல் தத்துவம் தந்த அய்ன்ஸ்டீன், தொலை பேசியை கண்டுபிடித்த கிரஹம் பெல், இன்னும் ராக்கெட், தகவல் தொடர்பு சாதனங்கள், அணு பிளப்பு விஞ்ஞான அதிசயங்களை கண்டுபிடித்த அனைத்து விஞ்ஞானிகளுமே மாட்டிறைச்சியை உணவாக சாப்பிடுபவர்கள் தானே.

இந்திய விஞ்ஞானி அப்துல் கலாம் கூட மாமிச பட்ஷியே.

அப்படி யெனில் தாமஸ குணவாதிகளாக மாமிசத்தை சாப்பிடுபவர்கள் அறிவிலிகள் புத்தி கூர்மையற்றவர்கள் தீண்தகாதவர்கள் என்று இந்து மதம் சொல்லும் தர்மம் பொய் தானே. கப்ஸா இல்லையா? கவைக்கு உதவாத வாதமல்லவா?

புராணத்தில் இந்துக்கள் சோம பானமும், சுராபானமும், மாட்டிறைச்சி , குதிரை கறி சாப்பிட்டது எந்த வகையை சேர்ந்தது.

மனிதர்களின் இயல்பான குணங்களை அடிப்படையாகக் கொண்டு தான் பிராமணர் சத்திரியர், வைசியர், சூத்திரர் (பார்ப்பன், அரசன், வியபாரி, விவசாயி) என்று நான்கு வகை வருணங்கள் (இனங்களாகப் பிரிக்கப்பட்டன).

ஆகையால் நால்வகையினரும் தம் இனத்திற்கு ஏற்புடைய கருமங்களை செய்து மூன்று குணங்களின் பாதிப்பிலிருந்து விடுபட வேண்டும் என்றும் கீதை போதிக்கிறது.




காஞ்சி பசுவதை தடுப்பு மாநாடு

இதில் பிராமணர் அல்லாத அனைவருமே இழிபிறவிகள் என்றும் சொல்லப்படுகிறது இஸ்லாம் அவலட்சணம், மலம் தின்னும் பன்றியை மட்டும் ஒதுக்கி வைக்கிறது. ஆனால் பன்றி இறைச்சியை உணவாக உட்கொள்ளும் எவரையும் இஸ்லாம் தீண்டதகாதவர் என்று புறம் தள்ளுவதில்லை.

கிருத்துவ மதத்தின் கடைசி பலி ஏசு. கடவுளின் குமாரனான கிருஸ்து கொலையுண்டதின் காரணமாக அவரது ரத்த பலியையே ஏற்று திருப்தி அடைந்த தாகவும், அதன் பின்னர் வேறு எந்த ரத்த



படிப்பகம்

www.padippakam.com

பலியும் தேவையில்லை என்றாகியது.

ஆனால்!! ஆடு, மாடு, கோழி, சேவல் என இந்து கடவுளர்க்கு (காளி, அம்மன், மதுரை வீரன்) பலி தொடர்கிறது. இந்த பலியை ஆரம்பித்து வைத்த சனாதன தர்ம புத்திரர்கள் சூத்திரர்க்ளின் தெய்வங்களை ஒதுக்கி வைப்பதும் தொடர்கிறது. இது ஏன்?

ராமன் பெயரால் ரத்த பலி கேட்கும் காஞ்சி காம கோடிகள் உழைக்கும் மக்கள், ஒடுக்கப்பட்டோர் தலித்துகள், பெண்கள் என ரத்த சேற்றில் மதத்தின் பேரால், மதம் பெற்றெடுத்த சாதி சனியனால் மூழ்கடிக்கப்பட்டனர். அப்போது மட்டும் உங்களின் பார்வையும், சிந்தனையும் சித்தாந்தமும் வேதாந்தமும் அவிந்து போய்விட்டதா?

கூலிகேட்டு போராடிய வெண்மணி மக்கள் எரித்து பொசுக்கப்பட்ட போதும், விழுப்புரத்தில் வெந்து தணிந்ததும், மேலவளவு கிராமத்தில் நிலமே ரத்த சகதியாக மாறியதும், பீகார் உழைப்பாளிகள் படு கொலைகளும், புன்னப்புரா வயலார் போராட்டமும், தெலுங்கானாவில் ஏற்பட்ட கொடூரமும் சங்கர மடத்திற்கு தெரிவதில்லை ராமனுக்கு கோவில் கட்ட அயோத்திக்கு கல் சுமந்து போது எத்தனை ஆயிரம் உயிர்கள் பரிக்கப்பட்டன.

ஆனால் மாட்டிறகாக மட்டும் இந்த நாவிகளின் மனம் கசிகிறது. போலியான, மனித நேயம் மறந்த கண்ணீர் சுரக்கிறது. நமது தேசத்தில், நூறு கோடி ஜனங்களில் 50 கோடி மனிதனுக்கு ஒரு வேளைக்கு கூட உணவில்லை சுமார் 20 கோடி மனிதர்கள் வீடின்றி வானமே கூறையாக சாலையோரமும், சாக்கடை கால்வாய்களிலும் வசிப்பது குறித்து சங்கரர்களுக்கு யோசிக்க நேரமில்லை.

பசுக்களை காத்திட பல நூறு பாதுகாப்பு மையங்கள் அமைக்க கோடிக்கனக்கில் செலவு செய்ய திட்டம் தீட்டியுள்ளனரம்.

**மிருகங்கள்** இயற்கை அளித்த ஒப்பற்ற **செல்வங்கள்**, அதில் ஆடும், மாடும் கூட அடக்கம்.

**ஆனால்!** பசுவை கட்டி போட்டு அதன் கன்றுக்கு சேர வேண்டிய பாலை அபகரித்து சுவைத்து குடிப்பது சங்கர மடத்திற்கும், மதவெறியன் அசோக் சிங்காலுக்கும் பிராமணத்திமேனகா காந்திக்கும் நியாயமானதாக தெரிகிறதோ?

ரத்தத்தை பாலாக மாற்றி தரும் பசுவின் பாலை குடிப்பதும், தயிர், மோர், நெய், வெண்ணை என நாக்கில் நீர் சுரக்க உண்ணும் காவிப்படைக்கு கன்றுக்கு இழைக்கும் கொடுமை மட்டும் சரியான செயல் என்று படுகிறதோ?

100 கோடி மக்கள் தொகை கொண்ட இந்திய நாட்டில் உணவு பஞ்சம் தலை விறித்தாடுகிறதே பஞ்சம், பசி, பட்டினியால் பரிதவிக்கும் உழைப்பாளி மக்களுக்கு சத்துள்ள குறைந்த விலையில் கிடைக்கும் உணவு மாட்டிறைச்சி அதை சாப்பிடுவதும் தவிர்க்க இயலாதது.

செத்த மாட்டை சாப்பிடுகிறார்களே, என்கின்றனர். இதனால் என்ன தீட்டு? கதர கதர மாட்டை அறுத்து சாப்பிடுவது பாவமா& மாண்டு மடிந்து மண்ணுக்குள் போவது பாவமா? புழு தின்னும் கோழியையும், மலம் தின்னும் பன்றியை விட புல்லையும், புண்ணாக்கையும் திண்ணும் மாடு கேவலமானதா? என வினவுகிறர் தந்தை பெரியார்.

அதே போல்! நாவிலே ராமனையும் கைகளில் கூர் வாளையும் வைத்திருப்பவர்கள் யோகிகளை போன்று பேசுவார்களே ஆனால்! கொலைகாரர்களாக நடந்து கொள்வர்கள் கடவுள் எங்கும் நிறைதிருக்கிறான் என்பார்கள் ஆனால், விலங்கினம் கேவலமாக மனிதனை நடத்துவர்கள்

எறும் பிறகு சர்க்கரை உணவிடுவார்கள் ஆனால் இங்குள்ள மனிதர்கள் குடிப்தற்கே நீரெடுக்க தடைவிதிப்பார்கள் என்று இந்து மதவாதிகளை சங்கரமடத்து காவிகளையும் கண்டு குமுறுகிறார் டாக்டர் அண்ணல் அம்பேத்கார்.

இந்த கபட வேடதாரிகளுக்கு மாடுகளின் மேல் உள்ள கரிசனமும், எறும்பின் பால் கொண்ட பாசமும், தலீத், ஒடுக்கப்பட்ட, பிறப்படுத்தப்பட்ட ஜனங்களின் மேல் இருப்பதில்லை.

இவர்கள் கூட்டிய பசு பாதுகாப்பு மாநாட்டிற்கு பின்னே இந்து மத வெறியும் மறு சாஸ்திரகோட்படும், இந்து நாடு என்ற லட்சியமும் தலீத் மற்றும் முஸ்லீம்களுக்கு எதிராக தாக்குதல் தொடங்ர்வதற்கான தத்து வார்த்தமும் உண்டு இதனை முறியடிக்க புறப்படுவோம்.

மாட்டுக்கறி ஒடுக்கப்பட்ட மக்களின், ஏழைகளின் உணவு என பறை சாற்றுவோம் இந்த ஆஷாச் பூதிகளின் முற்றுபுள்ளி வைக்க புறப்படுவோம் வாரீர்



படிப்பகம்

www.padippakam.com

# தொடரும் தலித் கற்பழிப்புகள்

## சீறியெழுந்த காஞ்சி மாநாடு

இந்த யுகம் தலித்யுகம், 21-ம் நூற்றாண்டு அம்பேத்கர் நூற்றாண்டு என பல்லாயிரக்கணக்கான மக்களிடையே 30-12-1999 அன்று வேலூர் மாநகரில் நடைபெற்ற அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க மாநில மாநாட்டில் அறிவிக்கப்பட்டதை அனைவரும் அறிந்ததே.!

தான் அறிவித்த கொள்கையை செயல்பாட்டால் செய்து கொண்டிருக்கும் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம், இதே கருத்தை காஞ்சிபுரம் மாவட்டளவில் வலியுறுத்த 30-07-2000 அன்று மாமல்லபுரத்தில் மாவட்ட பிரதிநிதிகள் மாநாடு கூட்டப்பட்டது.

எப்பொழுதும் கடல் அலைகளாலும், சிற்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த வரலாற்று சிறப்பு மிக்க மாமல்லபுரம் 30-07-2000 அன்று நீலக்கொடிகளாலும், அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தின் உணர்வுகளாலும் அலங்கரிக்கப்பட்டு மேலும் மாமல்லபுரத்திற்கு சிறப்பையும், அழகையும் சேர்ந்தது.

காஞ்சிபுரம் மாவட்ட தலைவர் எல். மதியழகன், மாவட்ட செயலர் முனிவேல் ஆகியோரின் தலைமையில் கூட்டப்பட்ட இம்மாநாடு காலை 10 மணியளவில் புதுவை தலித் சுப்பையா அவர்களின் 'விடுதலை கலை குழுவினரின்' பாராம்பரியமிக்க தலித்கலை நிகழ்ச்சிகளோடு கலை கட்டியது. மாமல்லபுரமே அதிரும்படி வாணவேடிக்கையோடும், மேள தாளங்களோடும், நிறுவனர் ஐயா யேசுமரியான் அவர்களும், மாநில தலைவர் அசோகன் அவர்களும் பல்வேறு வாகனங்கள் புடை சூழ மாமல்லபுரத்தை வலம் வந்து மாநாடு மண்டபத்தில் நுழைந்தார். இந்நேரத்தில் தலித் சொந்தங்களின் ஆரவாரங்கள் மதிப்பிட முடியாத அளவு கரைபுரண்டோடியது.



IACM இரவுப்பள்ளி, பொது தேர்வில் தேறிய மாணவிக்கு பரிசு வழங்குகிறார் நிறுவனர் ஐயா யேசுமரியான்

காஞ்சி மாவட்ட வழக்குக்குரைஞர் அணி செயலர் ஏ. குமார் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். மாநில ஆலோசகர் ப. சீனுவாசன் தலித் தலைவர்களுக்கும், தலித் தியாகிகளுக்கும் புகழ்மாலை தொடுக்க, நிறுவனர், மாநில தலைவர், பொதுச்செயலர் எஸ்.ஆர். மோகன் உட்பட மாநில நிர்வாகிகள் மற்றும் சமுதாய தலைவர்கள் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

பத்திரிக்கையாளர் மோ. ஜேம்ஸ் அவர்கள் மாநாட்டை வாழ்த்தி பேசும்போது. தங்களுடைய சுயநலத்துக்காக பல்வேறு தலித் தலைவர்கள் அரசியல் கட்சிகளோடு சமரசம் செய்யும் இவ்வேளையில் கொள்கை பிடிப்போடு செயல்பட்டுக்கொண்டிருக்கும் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க மாநாட்டில் வாழ்த்தி பேச வாய்ப்பளித்ததற்கு நான் ரொம்ப.. பெருமைப்படுகின்றேன்". என பெருமைபொங்க வாழ்த்தினர்.

"தமிழகத்தில் குறிப்பாக வட மாவட்டங்களில் பெரும்பான்மையான இளைஞர்கள் அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தின் பின்னால் அணி வகுத்திருப்பதைக் கண்டு இன்று நான் அதிசயிக்கின்றேன்.

தலித் யுகத்தை இந்த இளைஞர் பட்டாளம் கண்டிப்பாக வென்றெடுக்கும் என்ற நம்பிக்கை எனக்கு அதிகமாகவே உள்ளது" என வலியுறுத்தி வாழ்த்தி சென்றார் தமிழக மனித உரிமை கழக பொதுச் செயலர் அரங்க. குணசேகரன்.




படிப்பகம்

www.padippakam.com

தலித் வரலாற்றில் சமீப காலத்தில் ஜெனிவாவில் உள்ள ஐ.நா சபையில் காலெடுத்து வைத்து அம்மாமன்றத்திலேயே மொத்த தலித் மக்களின் குரலாக ஒலித்த குரலை, காஞ்சிபுரம் மாவட்ட மாநாட்டில் எதிர்பார்த்துக் கொண்டிருந்த தலித் சொந்தங்களின் செவிகளுக்கு உணவாக்க சிறப்புரையாற்றினார். நிறுவனர் ஐயா எல்.யேசுமரியான், "இயக்கங் கங்களெல்லாம் இன்று அரசியல் கட்சிகளாக மாறிப்போன இச்சூழலில் நாம் கொள்கை பிடிப்புடனே இருந்து இயக்கமாகவே செயல்படுவது அவசியம். இயக்கம் என்பது எப்பொழுதுமே இயங்கி கொண்டிருப்பது. அது எந்த சூழ்நிலையிலும் அடிபணியாது. யாருடனும் சமரசம் செய்து கொள்ளாது. நாம் விரும்பும் தலித் விடுதலையை இயக்கமாக இருந்தால்தான் பெறமுடியும்.

நமக்குள் நிறைய கட்டுப்பாடு தேவை. தியாக உணர்வு நம் மனதில் ஆழபதிய வேண்டும். தலித் யுகத்தையும். அம்பேத்கர் நூற்றாண்டையும் படைக்க போராட்டமே



சிறந்த வழி, போராட்டத்தினால் மட்டுமே இழந்த உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்று அண்ணல் அம்பேத்கர் கூறியதை இங்கு நினைவுருத்தகின்றேன்" என கோடிட்டர். வடதமிழகத்தில் தலித் கற்பழிப்புகள் தொடர்வதை கடுமையாக எச்சரித்து இது நிறுத்தபடவில்லை என்றால் **IACM** எரிமலையாய் வெடிக்கும் என கர்ஜித்தார்.

விண்ணைமுட்டும் ஆரவாரத்திற்கும் கரகோஷத்துக்கும் இடையே சிற்புரையாற்றினார் மாநில தலைவர் ப. அசோகன். மூடநம்பிக்கைகளும், மதவாதிகளும் இந்த தலித் சமுதாயத்தை கூறுபோட்டு சிதறடிக்கின்றன. இந்த நம்பிக்கைகளே தலித் மக்களை தொடர்ந்து நசுக்கி வருகின்றன. ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை பெறவேண்டும் என்றால் மூடநம்பிக்கைகளிருந்து விடுபட வேண்டும். அப்போதுதான் நம்மை பிடித்துள்ள தீண்டாமைக்குச் சாவுமணி அடிக்க முடியும்" என முழங்கினார்.

"தலித் மக்களின் விடுதலையோடு ஆணாதிக்க போக்கு அழிக்கப்பட்டு குறிப்பாக பல இன்னல்களுக்கு ஆளாகும் தலித் பெண்களுக்கு விடுதலை கிடைத்தால்தான் வரும்யுகம் தலித் யுகமாகவும், 21-ம் நூற்றாண்டு அம்பேத்கர் நூற்றாண்டாகவும் அமையும்" என எச்சரித்தார் மாநில மகளிர் அணி தலைவி செல்வி, சிபியரசி

துணைத்தலைவர் ஆர். கங்காதரன்,- துணைப்பொதுச்செயலர் ஜி. தேவேந்திரன், மாநில துணை கொள்கைபரப்பு செயலர் தலித் எம். ஜெயகுமார் ஆலோசகர் எம்.திருப்பதியான், கடலூர் மாவட்ட தலைவர் தெய்வீகதாஸ் - திருவண்ணாமலை மாவட்ட செயலர் ஆர். மூவேந்தன் விழுப்புரம் மாவட்ட செயலர் தலித் வி. தாஸ் ஆகியோர் உட்பட பல்வேறு நிர்வாகிகள் பேசினர். அகில உலக டாக்டர் அம்பேத்கர் இயக்க இரவு பாடசாலையில் பயின்று பத்து பனிரெண்டு வகுப்புகள் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பிக்கப் பட்டது.

காஞ்சிபுரம் மாவட்ட இளைஞர் அணி செயலர் டி.எம். கஜா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். திருப்போரூர் ஒன்றிய செயலர் எஸ். இராமகிருஷ்ணன் நன்றி கூறினார்.

உணர்வை விருந்தாக்கிய இம்மாநாட்டிற்கு மாவட்டம் முழுவதிலிருந்தும் இரண்டாயிரத்துக்கும் அதிகமான இளைஞர்களும், பெண்களும் ஆண்களும் கலந்து கொண்டனர். திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், வேலூர், திருவள்ளூர், சென்னை ஆகிய மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். **A.** புஷ்பராஜ் யசோதா இவர்கள் முன்னிலை வகித்தனர். இம் மாநாடு காஞ்சி மாவட்டத்தை கலக்கியது ●

**சிந்தை. ஆர்**



படிப்பகம்

www.padippakam.com

# தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கான புதிய ஊதிய விபரம் :

தமிழ்நாடு அரசிதழில் வெளியானது

குறைந்த பட்ச ஊதியச்சட்டம், விவசாயம் மற்றும் விவசாயத்துடன் தொடர்புடைய தொழிலுக்கான குறைந்த பட்ச ஊதிய சட்டம் :

ஜி. ஓ. 2(டி) எண் : 107 தொழிலாளர் மற்றும் தொழில் (ஜே. 2) நாள் : 28 - 10 - 1999

ஷெடியூல்

1. கலப்பை மற்றும் உழவு மாடுகளுடன் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஒரு நாள் ஊதியம். ரூ. 100.00 (நூறு)

2. கலப்பை மற்றும் உழவு மாடுகள் இன்றி உழவு வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஒரு நாள் ஊதியம். ரூ. 54.00 (ஐம்பத்து நான்கு)

3. நெல் அறுவடை கூலி : நெல் அறுவடை செய்து கதிரறுக்கும் கலத்திற்கு தூக்கிச் சென்று கதிர் அடித்து, தூற்றி, அளந்து மூட்டையில் நிரப்பி கொடுக்கும் ஆண் தொழிலாளிக்கு ஒரு நாள் ஊதியம் ரூ.54.00

பெண் தொழிலாளிக்கு ஒரு நாள் ஊதியம்.:ரூ. 45.00

அல்லது

கண்டு முதல் செய்யப்பட்ட நெல்லில் 1/8 நெல் கூலி யாக தர வேண்டும் மேற்கண்ட இரண்டில் எது அதிகமோ அதனை ஒரு நாள் ஊதியமாக தர வேண்டும்.

4. நெற்கதிர் தவிர மற்றவைக்கு

நெர் கதிர் தவிர மற்ற பயிர்களை அறுவடை செய்யும் விவசாயத் தொழிலாளிக்கு ஒரு நாள் ஊதியம் ஆண்: ரூ. 54.00 ; பெண் : ரூ. 45.00

5. விதை நெல் தெளிப்பு, நாற்றுப்பறித்தல், நாற்று நடவு செய்தல், களை எடுத்தல், ஆகிய வேலைகளுக்கு

ஆண் : ரூ. 54.00 பெண் : ரூ. 45.00

6. மற்ற விவசாய வேலைகளான, வரப்பு போடுதல், வரப்பு கழித்தல், ஒழுங்குபடுத்துதல், தேனீ வளர்ப்பு, பால் பண்ணை, கோழிப் பண்ணை மற்றும் மரம் ஏறுதல் போன்ற வேலைகளில் ஈடுபடும்ஆண் தொழிலாளிக்கு ஒரு நாள் ஊதியம். : ரூ. 54.00





பெண் தொழிலாளிக்கு ஒரு நாள் ஊதியம். : ரூ. 45.00

மேற்கண்ட திருத்தப்பட்ட கூலிச்சட்டம் என்பது கல்லூரிகள் ஆராய்ச்சி மையங்கள் (தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகம் மற்றும் விவசாயப் பண்ணைகள் இவைகளுக்கு உட்பட்டது) மற்றும் விவசாயம், தோட்டத் தொழில் ஆகியவைகளில் ஈடுபடும் அரசுதுறை சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் இச்சட்டம் பொறுந்த கூடியதாகும். மேற்கண்ட திருத்தப்பட்ட கூலி என்பது



படிப்பகம்

www.padippakam.com

அதன் தொழிலாளிக்குரிய அடிப்படை ஊதியம், வாழ்கைக்குரிய செலவு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியதாகும். ஆதலால் சாப்பாட்டுக்கென வழங்கக்கூடிய எந்த ஒரு தொகையும் மேலே கண்ட ஊதியத்தில் உள்ளடக்கியது அல்ல. அத்தொகை எதுவும் மேற்கண்ட ஊதியத்தில் கழிவு செய்யக்கூடாது.

-குறைந்தபட்ச ஊதியத்தை முழுவதும் தொகையாகவோ அல்லது ஒரு பகுதி தொகையாகவும் மற்றொரு பகுதி பொருளாகவும் சில விவசாயத் தொழில்களுக்கு வழங்கபடுவது குறித்து-

- தமிழ்நாட்டில் சில இடங்களில் சில குறிப்பிட்ட விவசாயத் தொழில்களுக்கு அதில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு ஒரு பகுதி தொகையாகவும், ஒரு பகுதி பொருளாகவும் கொடுக்கபடுவது வழக்கமாக இருந்து வருகின்றது. அவ்வாறு வழங்கபடும் ஊதியம் அரசு அறிவித்துள்ள குறைந்தபட்ச ஊதிய சட்டத்திற்கு பாதிப்பு இல்லாமல் அந்த ஊதியத்திற்கு குறைவு இல்லாமல் வழங்கப்பட வேண்டுமென்று தமிழ்நாடு அரசு கருத்திற்கொண்டு, அதன் அடிப்படையில் எங்கெங்கு ஊதியம் ஒரு பகுதி தொகையாகவும், மறு பகுதி பொருளாகவும் ஊதியம் வழங்கப்படுகின்றதோ அம் மாதிரியான ஊதியங்கள் எதுவும் மேலே கண்ட ஊதிய சட்டத்திற்கு உட்பட்டு அந்த ஊதியத்திற்கு, குறைந்த மதிப்பிடும் வகையில் ஊதியம் வழங்கக் கூடாது என்ற அடிப்படையிலும் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

ஊதியமாக வழங்கப்படும் பொருள் (நெல் போன்றவை) மதிப்பீடு செய்கின்ற போது குறைந்த பட்ச ஊதியச் சட்டம் ரூ. 20 (1953 விதிகளுக்குட்பட்டு மதிப்பீடு செய்யப்பட வேண்டும்)

விவசாய தொழிலாளர்கள் வேலை செய்யும் நேரம் என்பது முந்தைய ஷெட்யூலில் குறிப்பிட்டள்ள நேர வரையறை என்பது அந்த தொழிலாளிகள் சாப்பாடிற்கென எடுத்துக் கொள்ளும் நேரம், மற்றும் ஓய்வு எடுத்துக் கொள்ளும் நேரம் ஆகியனவற்றை உள்ளடக்கியதாகும்.

- விவசாய மற்றும் விவசாயத் தொடர்புடைய வேலைகளை செய்து வரும் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்படும் ஊதியம் என்பது இச்சட்டத்தில் சொல்லப்படுகிற ஊதியத்தை காட்டிலும் கூடுதலான ஊதிய உரிமைக்கு எந்தவகையிலும் பாதிப்பு ஏற்படுத்தாது என்ற நிபந்தனையின் பேரில் இச்சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

ஒம். ஜி.ஏ.ராஜ்குமார்
(அரசு செயலாளர்)

ஒரு நாள் வேலை நேரம் என்பது
ஆண் தொழிலாளி - 6-00 மணிநேரம்
பெண் தொழிலாளி - 5-00 மணி நேரம்

செங்கையில் நடைபெற்ற IACM மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகளுக்கான ஒரு நாள் பயிற்சி பாசறை. தோழர் பால்ராஜ் கருத்துக்களை வழங்கினார்







படிப்பகம்

www.padippakam.com

திருப்போரூர் காவல் நிலையத்திலுள்ள காவலர்கள், தலித்மக்களை ஒழித்துக் கட்டுவதும் நேரடியாகவே சாதி வன்கொடுமைகளை ஏவிவிடுவதும் தொடர்கதையாக உள்ளது. திருப்போரூர் காவல்துறையினரின் சாதி கொடுமைகளைத் தாங்கிக்கொள்ள முடியாத தலித் மக்கள் பலமுறை உயர் அதிகாரிகளுக்கும் தமிழக அரசிற்கும் புகார் செய்தும் பயனேதுமில்லை.

திருப்போரூரில்

# சாதிக்கலவர அபாயம்!

எனவே திருப்போரூர் காவல்துறையினரிடம் அப்பகுதியிலுள்ள தலித் மக்கள் பாதுகாப்பு வேண்டி அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தை அணுகினர். கடந்த 30-7-2000 அன்று மாமல்லபுரத்தில் நடைபெற்ற அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க காஞ்சி மாவட்ட மாநாட்டில் "தொடர்ந்து தலித் விரோத போக்கு கடைபிடித்துவரும் திருப்போரூர் காவலர்களை கூண்டோடு பணி நீக்கம் செய்ய வேண்டும்" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, காவல்துறை உயர்அதிகாரிகளுக்கும், தமிழக அரசிற்கும் அனுப்பப்பட்டது. இதனால் திருப்போரூர் காவலர்களுக்கு நெருக்கடி அதிகமாகி. டெம்ப்ரேச்சர் கூடியது

எப்படியாவது தலித் மக்களை குறிப்பாக அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கத்தினரை பழிவாங்க வேண்டும் என்று கங்கணம் கட்டினர் காவல் துறையினர். நூற்றாண்டு அதற்கான நேரமும் வந்தது, திருப்போரூர் காவலர்களுக்கு.

கேளம்பாக்கம், திருப்போரூர் பகுதிகளில் பயணிகளை ஏற்றி செல்வதற்கு ஏராளமான தனியார் வேன்கள் பயன்படுத்தப்படுகின்றது. திருப்போரூரில் பொரும்பாலான வேன் உரிமையாளர்கள் வன்னிய இனத்தவர்கள். கேளம்பாக்கத்தில் உள்ள வேன்கள் தாழ்த்தப்பட்ட இளைஞர்களால் ஓட்டடப்படுகின்றன. பயணிகளை ஏற்றுவது சம்பந்தமாக இரண்டு ஊர் வேன் ஓட்டுனர்களுக்கு சிறுசிறு பிரச்சனைகள் எழும் இதில் பெரும்பாலும் தலித்துக்கள் அடிக்கடி தாக்கப்படுவார்கள்.

இதேபோல் 7-8-2000 அன்று திருப்போரூர் வேன் ஓட்டுநர் ஒருவர் கேளம்பாக்கத்தில் பயணிகளை ஏற்றியுள்ளார். அந்நேரம் கேளம்பாக்கம் பாபு என்கிற தலித் இளைஞர் நேரமாவதால் பயணிகளை ஏற்ற வேண்டாம் என கூறி திருப்போரூர் வண்டியில் ஏறிய பயணிகளை இறக்கி தன் வண்டியில் ஏற்றியுள்ளார். இதை திருப்போரூர் சென்று மற்ற தன் சாதி ஓட்டுநர்களிடம் திலத்தார் அவ்வோட்டுனர்கள்.

சிறிது நேரத்திற்குள் பாபு தன்னுடைய வண்டியில் கேளம்பாக்கத்திலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு திருப்போரூர் சென்றார். பாபு வருவார் என எதிர்பார்த்து காத்துக் கொண்டிருந்த நூற்றுக்கு அதிகமான வன்னிய இளைஞர்கள் பாபுவையும், கண்ணாப்பட்டு கிராமத்தை சார்ந்த கபாளி சங்கர் என்பவரையும் ஓட,ஓட அடித்தனர்.



திடீர் முற்றுகை போர்



படிப்பகம்

www.padippakam.com

உயிர் போகுமளவு உதைத்தனர்.

இந்த சம்பவத்தை ஏற்கெனவே எதிர்பார்த்து காத்துக்கொண்டிருந்த திருப்போரூர் இன்ஸ்பெக்டரும், எழுத்தர் நாகராஜனும் அடிபட்ட தலித் இளைஞர்களையே கைது செய்து அன்று முழுவதும் காவல் நிலையத்திலேயே வைத்திருந்தனர். இதில் பாபு என்ற தலித் இளைஞருக்கு பலத்த காயம் ஏற்பட்டதால் மயக்கமடைந்து விழுந்து விட்டார். உடலிலிருந்து அதிகமாக இரத்தமும் வெளியேறிவிட்டது. வேறு வழியில்லாமல் பாபுவை செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். பாபுவின் உடல்நிலை கவலைக்கிடமாக இருந்ததை மருத்துவர்கள் கூறியதை கேட்ட திருப்போரூர் காவலர்கள், அவசர அவசரமாக தலித் இளைஞர்களை தாக்கிய வன்னியர்கள் மீது உடனடியாக ஜாமீனில் வெளிவரக்கூடிய சாதாரண வழக்குகளை பதிவு செய்தனர், இவ்வாறு வழக்கு பதிவு செய்தவுடனேயே நீதிமன்றத்தில் ஜாமீனில் வெளிவருவதற்கு ஏதுவாக ஜாமீன்தாரர்களை தயார்படுத்திக் கொண்டு வன்னியர்களுக்கு ஆதரவாகவே செயல்பட்டனர்.



கடைகள் அடைப்பு

நடந்தவற்றை திருப்போரூர் காவல்நிலைய ஆய்வாளரே செங்கல்பட்டு தொகுதி எம்.பி ஏ.கே. மூர்த்தியிடம் தெரிவிக்க அவர் கொடுத்த தைரியத்தில் மேலும் தீவிரமாக களத்தில் இறங்கினர் காவல் துறையினர். இந்நேரத்தில் அடிப்பட்டு செங்கல்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த பாபுவை பார்த்துவிட்டு வீடு திரும்பி கொண்டிருந்த பாபுவின் உறவினர்களை வழியிலேயே எந்தவித விசாரணையுமின்றி ஜாமீனில் வெறிவராதபடி வழக்கு பதிவு செய்து வேலூர் சிறையில் அடைத்தனர்.

தலித் மக்களைப் பழிவாங்கி விட்டோம் என்ற ஆணவத்தோடு சாதி வெறியர்களுடன் சேர்ந்துகொண்டு பார்ட்டி வைத்துக் கொண்டிருக்கின்றனர் திருப்போரூர் காவல்துறை காவலர்கள்.

இதனால் கொதிப்படைந்த அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க இளைஞர்கள் 16-8-2000 அன்று கேளம்பாக்கத்தில் வெகுண்டெழுந்தனர். கடைகள் அடைக்கப்பட்டன. கடைசியில் திருப்போரூரில் காவல்துறையினரின் சாதி வெறி போக்கிற்கு சாவுமணி அடித்தனர்.



போலீஸ் குவிந்தனர்

வேலியே பயிரை மேய்வதுபோல திருப்போரூர் காவல்துறை காவலர்களே அப்பகுதியில் சாதிக்கலவரத்தை தூண்ட காரணமாக இருந்து வருகின்றனர். இதனால் தலித் மக்களின் உடமைகளுக்கு உயிருக்கும் பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவுகின்றது.

தொடர்ந்து இதே போக்கு நீடித்தால் திருப்போரூர் கலவர பூமியாவது உறுதி என்பதால் அரசு இயந்திரம் தலையீட்டு இதற்கு உடனடி தீர்வு காணவேண்டியது அவசியம்.

---

சிந்தை. ஆர்



படிப்பகம்

www.padippakam.com

அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்க

# காஞ்சி மாவட்ட மாநாட்டு தீர்மானங்கள்

1. மேல்மருவத்தூரில் 11-07-2000 அன்று இரவு தலித் மக்கள் பங்காருவின் அடியாட்களால் தாக்கப்பட்டதை இம்மாநாடு கண்டிக்கிறது. பாதிக்கப்பட்ட தலித் மக்களுக்கு நிரந்தர பாதுகாப்பு அளிக்குமாறு இம்மாநாடு வலியுத்துநிறது.

2. பொதுத்தறையில் இதுவரையில் நிரப்பப்படாத காலி இடங்களை இட ஒதுக்கீடு அடிப்படையில் உடனடியாக நிரப்பப்பட வேண்டும். தனியார் துறையில் இட ஒதுக்கீட்டை கட்டாயமாக்க வேண்டும்.

3. தமிழகத்தில் தொடர்ந்து தலித் பெண்கள் கற்பழிக்கப்பட்டு படு கொலை செய்யப்படுவதை வன்மையாக கண்டிக்கிறது.

4. காஞ்சிமாவட்டத்திலுள்ள பெரும்பாலான ஏரிகள் தனியார் கம்பெனிகளால் ஆக்கரமிப்பு செய்யப்படுவதால் இம்மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் நிலை கவலைகிடமான நிலையில் உள்ளது. தமிழக அரசு ஏரிகளிலுள்ள ஆக்கரமிப்புகளை அகற்றி ஏரிகள் அழிந்துப் போவதை உடனே தடுத்து நிறுத்தி பாதுகாக்க வேண்டும்.

5. தமிழகத்திலுள்ள பஞ்சமி நிலங்கள் மீட்டு தலித் தலைவர் இரட்டை மலை சீனிவாசனுக்கு தமிழக அரசு சென்னையில் சிலை வைக்க வேண்டும்.

6. திருபோரூர் காவல் நிலையத்தில் தொடர்ந்து தலித் விரோத போக்கை கடை பிடித்து வரும் அனைத்து காவலர்களையும் பணி நீக்கம் செய்ய வேண்டும். நீலாங்கரை சப் இன்ஸ்பெக்டர், IACM மாவட்ட தலைவரை சாதிப்பெயர் செல்லி திட்டி அவமானப் படுத்தியதால் அவரை வேலை நீக்கம் செய்து கைது சைய்ய வேண்டும்.



7. திருப்போரூர் பகுதியிலுள்ள சலவைத் தொழிளாலர்களுக்கு வீட்டமனை பட்டா வழங்க வேண்டும்.

8. காஞ்சி மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்டு வந்த DRO சகாயம் அவர்கள் மாற்றப்பட்டதை கண்டிக்கிறோம். மக்கள் பணியில் ஈடுபடும் தியகம் நிறைந்த ஒரு சில நல்ல அரசு ஊழியர்களை அடிக்கடி இடமாற்றம் செய்வதை வன்மையாக கண்டிக்கிறோம்.

9. பஞ்சமி நிலபோராட்டத்தில் இறந்த ஏழுமலை, ஜான்தாமஸ் குடும்பங்களுக்கு தலா 5ஏக்கர் நிலம் வழங்க வேண்டும்.

10. தலித் மக்களின் அவசிய உணவான மாட்டுக்கறி உணவை தேசிய உணவாக அறிவிக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

# அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம் IACM

## கடலூர் - விழுப்புரம் மாவட்ட பிரதிநிதிகள் மாநாடு

நாள் : 30.09.2000, சனிக் கிழமை

காலை : 9.00

தலைமை

திரு. **மா. தெய்வீக தாஸ்** கடலூர் மாவட்ட தலைவர்

திரு. **வி. தலித் தாஸ்** விழுப்புரம் மாவட்ட தலைவர்

எழுச்சியுரை

'தலித் விடிவெள்ளி'

வழக்குரைஞர் ஐயா **எல். யேசுமரியான்** நிறுவனர்

'மக்கள் தளபதி' திரு. **ப. அசோகன்**, மாநிலத் தலைவர்

'மக்கள் சேவகர்' திரு. **எஸ். ஆர். மோகன்** பொதுச் செயலர்

வாழ்த்துரை

**பேராசிரியர் பெரியார்தாசன்**

மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொள்கின்றனர்.

இவண்

மாநாட்டுக் குழுவினர், அகில உலக டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு இயக்கம்


தேவை

களம் மாத இதழுக்கு அனைத்து மாவட்டங்களிலிருந்தும் நிருபர்கள் மற்றும் விற்பனை முகவர்கள் (ஏஜெண்ட்) தேவை.

தொடர்புக்கு :

எம். ஜே. நாயகம்,
நிர்வாகி - களம்,
21D/1, திருக்கழுக்குன்றம் ரோடு,
செங்கல்பட்டு - 603 002.


நாள் - அஞ்

பெறுநர்

Published by G. GOPINATHAN, 67, Canal Street, Chennai - 600 021. Printed by M. NAVANEETHAN at NAVAJOTHI ACHAGAM, Chennai - 600 002

படிப்பகம்